**CC**.**No**.34/2024

**Date**: 12.03.2026

**ம.சா. 1. கோவிந்த ராமானுஜம், த/பெ. ஆழ்வார்சாமி, காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A., M.Ed., படித்துள்ளேன். பீர்க்கலைகாடு அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி கடந்த 2003 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் ஓய்வுபெற்ற பின்னர் தொழில் எதுவும் செய்கிறேனா என்றால் இல்லை. பணி ஓய்விற்கு பின்னர் என் மகன்கள் இருவரும் நடத்தி வரும் பாரதி மருத்துவமனையை கவனித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் எதுவும் செய்கிறேனா என்றால் இல்லை. எதிரி செல்வராஜை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் சுமார் 5–6 வருடங்களாக தெரியும். எதிரியின் குடும்ப விபரங்கள் எதுவும் தெரியாது. எதிரி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் கட்டிட தொழில் செய்துவருவது பற்றி மட்டும் தெரியும். எதிரி எந்த தேதியில் என்னை சந்தித்து பணம் கேட்டார், எந்த தேதியில் நான் எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது புகார் மனுவிலோ, சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் 12.07.2023 ம் தேதி என்னுடைய வீட்டில் வைத்து ரூ. 17 லட்சம் கொடுத்தேன்.**

**2) என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்றால் கட்டிடம் கட்டி விற்கும் தொழில் செய்வதால் பணம் தேவைக்காக என்னிடம் கேட்டார். நான் பணம் கொடுத்தேன். எவ்வளவு நாட்களில் பணத்தை திருப்பி தருவதாக எதிரி கூறியதாக எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாகத்தான் கொடுத்தேன். பணம் கொடுத்த தேதியன்று காசோலையை தவிர வேறு ஏதேனும் ஆவணம் எதிரியிடம் இருந்து பெற்றேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை.**

வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் நம்பிக்கையின் பேரில் வட்டியில்லாமல் பணம் கொடுத்தேன். கதிரவன் என்பவர் என்னுடைய மருத்துவமனையில் எனக்கு உதவியாக இருப்பவர் அவர்தான் எதிரியை அழைத்து வந்ததார். பணம் கொடுத்த தேதியன்று கதிரவனும் உடன் இருந்தார் . பணம் கொடுத்த விபரம் அவருக்கும் தெரியும். கதிரவன் பணம் கொடுத்த தேதியன்று உடன் இருந்ததாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி கதிரவனை எனது தரப்பில் 2 சாட்சியாக விசாரிக்ககோரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவினை எதிர்த்து நான் சீராய்வு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நான் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்பதாலும், எனது மகன்கள் இருவரும் மருத்துவராக இருப்பதாலும் எங்களுக்கு பண பரிவர்த்தனை சம்பந்தமாக சட்டதிட்டங்கள் ஓரளவிற்கு தெரியும் என்றால் சரிதான். அரசு விதிகளின் படி ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பண பரிவர்த்தனை செய்யும் போது அதை வங்கி பரிவர்த்தனையாகத்தான் செய்யவேண்டும் என்ற விதி தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ. 17 லட்சத்தை எதிரி வாங்கவில்லை என்றாலும், அவ்வாறு நான் பணமாக ரூ. 17 லட்சத்தை எதிரிக்கு கொடுத்திருந்தால் அது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த ரூ.17 லட்சம் எனது சேமிப்பு பணமா அல்லது எனது கையிருப்பு பணமா என்றால் நான் மருத்துமனையின் பொருப்பாளராக இருப்பதால் என்னிடம் எப்போதும் கையிருப்பில் இருக்கும் அதை கொடுத்தேன். மேற்படி பணத்தை அன்றைய தினம் வங்கியில் இருந்து எடுக்கவில்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். மேற்படி எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.17 லட்சத்தை எனது வருமான வரி கணக்கில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எனது வருமான வரி கணக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார்.

4) பணம் எந்த முறையில் கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுகளாக

கொடுத்தேன். எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்று சொல்வதை மறுத்து நான் எனது தரப்பு சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க தயாராக இருக்கிறேன். எதிரி வழக்கு காசோலையை எந்த தேதியிட்டு கொடுத்தார் என்றால் பணம் வாங்கும்போது 20.12.2023 என பின்தேதியிட்டு கொடுத்தார். காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரியே பூர்த்தி செய்து கொண்டுவந்ததார். காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையினாலும், தொகை, பெயர் ஒரு மையினாலும் உள்ளது என்றால் அதை எதிரிதான் பூர்த்தி செய்து வந்தார். வழக்கு காசோலையை நான் பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததில் இருந்து எதிரியிடம் பணத்தை கேட்டுக்கொண்டே இருந்தேன் அவர் கொடுக்காததால் நான் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

5) நான் ஓய்வு பெற்ற பின்னர் எனது பெயரில் எந்த இடமும் கிரையம் செய்யவில்லை. ஒப்பந்தமும் செய்யவில்லை. நான் காரைக்குடி கழனிவாசல் பகுதியில் அழகப்பன் அம்பலம் காமாட்சி அம்மன் கோவில் அருகில் உள்ள சுமார் 12 சென்ட் நிலத்தை ஆதம்மை தவமணி என்பவரிடம் ரூ. 15 லட்சம் பேசி ரூ.5 லட்சம் முன் தொகையாக கொடுத்து கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்றாலும், பாக்கி தொகையை செலுத்தி கிரையத்தை பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் ஆதம்மை தவமணி ஆகியோருக்கு எதிரி இடை தரகராக இருந்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கிரையம் செய்யாமல் எதிரியின் காசோலையை வலுக்கட்டாயமாக பெற்றுக்கொண்டு அதிகமாக பணம் பெறுவதற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மிகப்பெரிய தொகையான ரூ. 17 லட்சத்தை ஆவணங்கள் எதுவும் இல்லாமலும், வட்டி இல்லாமலும் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். எதிரிக்கு ரூ.17 லட்சம் கொடுத்ததற்கான எனது நிதி ஆதாரத்தை நிரூபிக்க தயாராக இருக்கிறேன். பணம் கொடுத்த பின்னர் சுமார் 5 மாதமாக எதிரி பணத்தை திருப்பி தர நான் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

6) நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும், அதற்கு ஆதரவாக காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கும் ஆதம்மை தவமணிக்கும் ஏற்பட்ட இடப்பிரச்சனை காரணமாக எதிரியின் காசோலையை பெற்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகார் மனுவில் எந்த தேதியில் எதிரி பணம் கேட்டார் என்றும், எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்பதால் எனது புகார் மனு ஏற்புடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் தொழில் செய்தேன் என்றாலும் இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் வங்கி மூலம் கொடுத்திருப்பேன் என்றாலும், கையில் இருந்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 16:08:19 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)